பட்டு பருத்தி
மற்றும்
றெடிமேட் உடைத்
தெரிவைச் செய்ய நாடுங்கள்

யோகாமணி
ஆடை அகம்

33, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

உங்கள் ஆடைத் தேவைகளை
விரைவாக பூர்த்தி
செய்கிறாள்

யோகாமணி
ஆடை அகம்

33, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 08 புதன்கிழமை (22 - 06 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 206

# புலிகளுடன் பேச்சு நடத்த டி.பி. தயாராம்!

## அரசியல் தீர்வே ஒரே வழி இராணுவத் தீர்வு அல்லவாம்

கொழும்பு, ஜூன் 22

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன். இது குறித்து விடுதலைப் புலிகளுடன் பேசவும் நான் தயாராக இருக்கிறேன்.

— இவ்வாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கூறியிருக்கிறார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் "த சண்டே லீடர்" வாரப் பத்திரிகையின் முரளா வது இதழுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

'இந்தத் தீவிர பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காணப்பட வேண்டும். இராணுவத் தீர்வு அல்ல என்று நாம் தொடர்ந்து கூறிவருகின்றோம்.'— என்றும் அந்தப் பேட்டியில் டி. பி. விஜேதுங்கா தெரிவித்திருக்கிறார்.

வடக்கு - கிழக்கில் இருப்பது இனப்பிரச்சினை அல்ல. பயங்கரவாதப் பிரச்சினையே என்றும் —

அதற்கு இராணுவ முறையில் தீர்வு காணப்படும் என்றும் —

கடந்த மார்ச் 24 ஆம் திகதி தென்மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் வரை அடிக்கடி கூறி வந்த ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா —

பின்னர் தென் மாகாண

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விமானங்கள் இறங்க பலாலியில் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22

பலாலி விமானத்தளத்தில் விமானங்கள் தரை இறங்குவதற்கு முன் அப்பகுதியில் ஹெலி வட்டமிட்டு பாதுகாப்பு வழங்கி வருவதாகத் தெரியவருகிறது.

அதேபோல், விமானங்கள் புறப்பட்டுச் செல்லும் முன்னரும் ஹெலி வட்டமிட்டு நோட்டம் பார்க்கிறது என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில நாட்களாக இந்தப் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்பட்டது.

## பிரபா ஓர் "இராணுவ மேதை": புலிகளை வெல்வது பகற்கனவு

### புதிய ஆங்கில வார இதழ் விமர்சனம்

கொழும்பு, ஜூன் 22

"நாம் விரும்புகிறோமோ, இல்லையோ மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸவின் வார்த்தைகளில் கூறுவதானால் விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் தாம் ஓர் "இராணுவ மேதை" (Military Genius) என்பதை சந்தேகத்துக்கு அப்பால் நிரூபித்து விட்டார்.

பிரபல எழுத்தாளர் ரொஹான் குணரத்தின கொழும்பிலிருந்து புதிதாக வெளிவரும் 'த சண்டே லீடர்' ஆங்கில வார இதழில் 'அரசியல் படுகொலைகளும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தந்திரோபாயமும்' என்ற கட்டுரையில் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அக்கட்டுரையில் இருந்த சில பகுதிகள் வருமாறு:-

எந்த அரசிடம் இருந்தும் அல்லது குழுக்களிடம் இருந்தும் தமது போராட்டத்துக்குத் தேவையான முக்கிய விஷயங்களைப் பெற்றுக்கொள்வதே விடுதலைப் புலிகளின் நோக்கம் என்பது பிரேமதாஸா காலத்தில் தெளிவாக தெரியவந்தது.

பல வழிகளில் இந்திய அரசிடமோ அல்லது இலங்கை அரசிடமோ சிக்காது — தமது இலட்சியத்தை அடைவதற்காக தொடர்ந்து போரிட்டு வரும் ஒரே ஒரு விடுதலை

(4-ஆம் பக்கம் பார்க்க)

### தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரான

## அனுராவுக்கு இரு தமிழரும் முஸ்லிமும் ஆலோசகர்கள்!

கொழும்பு, ஜூன் 22

தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் என்ற முறையில் அனுரா பண்டாரநாயக்கா தமக்கு விசேட ஆலோசகர்களாக மூவரை நியமிக்க தீர்மானித்து இருக்கிறார்.

ஜனாதிபதியின் ஆலோசனையுடன் இந்த ஆலோசகர்கள் நியமிக்கப்படுவர் என்றும், ஆலோசகர்களில் ஒருவர் முஸ்லீம், ஒருவர் இலங்கைத் தமிழர் இன்னொருவர் மலையகத்தைச் சேர்ந்த தமிழராக இருப்பர் என்றும் —

மலையகத் தமிழர் சார்பில் ஒருவரை சிபாரிசு செய்யும்படி அமைச்சர் தொண்டமானை அனுரா பண்டாரநாயக்கா கோரவிருப்பதாகவும் தெரிவிக்க படுகிறது. (ஒ-எ)

## பிரேமா பிறந்ததின நிகழ்வில் டி.பி, ரணில், ஜே.ஆர்!

### எதிரணியினரும் பங்குபற்றுவர்

படுகொலை செய்யப்பட்ட ஜனாதிபதி பிரேமதாஸாவின் 70 ஆவது பிறந்த தினம் நாளை கொழும்பு சரசவிபாயாவில் கொண்டாடப்படும் போது அதில் நாட்டின் பிரபல அரசியல் தலைவர்களும் பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பிரதம அதிதியாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கலந்து கொள்வார். முக்கிய உரையை முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா நிகழ்த்துவார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் சிறிசேன கூரே ஆகியோரும் பேசுவார்கள்.

அமைச்சர்கள் அரசு மற்றும் எதிரணி எம்.பிக்களும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

"பிரேமதாஸ தத்துவம்; பிரேமதாஸாவின் தெரிவு செய்யப்பட்ட சிந்தனைகள்—பாகம்"-1 என்ற தலைப்பிலான நூலும் வெளியிடப்படவுள்ளது. புதிதாக அமைக்கப்பட்ட பிரேமதாஸா நிலையம் இந்த நிகழ்ச்சியை ஒழுங்கு செய்துள்ளது.

இந்நிலையத்தின் போஷகர்களாக ஜனாதிபதி விஜேதுங்காவும் பிரதமர் ரணிலும் உள்ளனர். (இ-எ)

## ஜனதாதள் மீண்டும் இரண்டாகப் பிளவு!

புதுடில்லி, ஜூன் 22

ஜனதாதள் கட்சி மீண்டும் இரண்டாகப் பிளவுபட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இக் கட்சியின் லோகசபை எம். பிக்களில் 14 பேர் தாங்கள் கட்சியை விட்டு விலகி விட்டதாகவும்—

தங்களை லோகசபையில் தனிக் குழுவாக அங்கீகரிக்கும்படியும் சபாநாயகர் சிவராஜ் பட்டீலைக் கேட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனதா கட்சியில் இருந்து இராஜினாமாச் செய்தவர்களில் முன்னாள் அமைச்சர்

(3ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 22

கிளாலி - பூநகரிப் படகுச் சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஒ 3)

## செஞ், அதிகாரி பலாலிக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 22

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் யாழ் அலுவலகப் பிரதிநிதி செல்வி மேரி பலாலியில் உள்ள உயர் இராணுவ அதிகாரிகளுடன் பேச்சு நடத்த நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அங்கு செல்கிறார். (ஒ-3)

## சிறிமாவோ 3 ஆம் திகதி திரும்புகிறார்

கொழும்பு, ஜூன் 22

சிங்கப்பூரில் சிகிச்சை பெற்று வரும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அடுத்த மாதம் 3 ஆம் திகதி கொழும்பு திரும்புவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

### மூச்சந்தி முரளி



பிறந்தநாள் நிகழ்ச்சிக்கு பெரும் புள்ளியள் பலர் போகப் போகினமாம்..! உது எல்லாம் எலக்ஷன் ஸ்டண்ட் பாருங்கோ ....!

### அரச படைகளின் தாக்குதலுக்கு எதிராக

# கூட்டுறவாளர்கள் கண்டனப் பேரணி!

## நேற்று நகரில் திரண்டனர்

யாழ்ப்பாணம், ஜூன் 22

தமிழர்கள் மீதான அரசின் கண்மூடித்தனமான தாக்குதல்களை ஆட்சேபித்து யாழ், மாவட்ட கூட்டுறவாளர்கள் நேற்று யாழ். நகரில் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்றை நடத்தினர்.

ஆயிரக்கணக்கான கூட்டுறவாளர்கள் கறுப்புப் பட்டி அணிந்து அணி அணியாக ஊர்வலமாகச் சென்றனர்.

நேற்றுக் காலை 10 30 மணியளவில் யாழ். மணிக்கூண்டு வீதியில் உள்ள யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையின் பணிமனையில் இருந்து பேரணி ஆரம்பமானது.

சுலோகங்கள், பதாகைகள் தாங்கியபடி கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் பேரணியில் முன்னே சென்றனர்.

அவர்களைத் தொடர்ந்து யாழ்.மாவட்டக் கூட்டுறவு அச்சக ஊழியர்கள், பனை—தென்னை வள அபிவிருத்தி பணியாளர்கள், சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள், பணியாளர்கள் மற்றும் அனைத்து கூட்டுறவு அமைப்புகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் ஊழியர்கள் அணி வகுத்துச் சென்றனர்.

பேரணியில் சென்றோர் ஸ்ரீலங்கா அரசைக் கண்டித்து யாழ். ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி, நாவலர் வீதி ஊடாக

(4-ஆம் பக்கம் பார்க்க)

## நகரில் ஒலித்த கோஷங்கள்; பி.பி.ஸி. செய்தியாளர் பதிவு

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ் நகரில் நேற்று கூட்டுறவாளர்களால் நடத்தப்பட்ட கண்டனப் பேரணியை யாழ். வந்திருக்கும் பி. பி. ஸியின் சிங்களச் சேவையின் பொறுப்பாளர் திரு.எம். வசந்தராஜா பார்வையிட்டார்.

பேரணியில் ஒலித்த கோஷங்களை அவர் ஒலிப்பதிவு நாடாவில் பதிந்து கொண்டார். புகைப்படங்களையும் அவர் எடுத்துக் கொண்டார்.

பேரணியில் ஒலித்த கோஷங்கள் சில வருமாறு:-

★ நிறுத்து நிறுத்து குண்டு வீச்சை நிறுத்து!

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கில் ஜனாதிபதி தேர்தலை தவிர்த்து

## நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்த டி.பி. திட்டம்

கொழும்பு, ஜூன் 22

ஜனாதிபதித் தேர்தலை வடமாகாணத்தில் நடத்துவதைத் தவிர்க்கும் ஒரு நடவடிக்கையாகவே ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி விஜேதுங்கா திட்டமிட்டுவருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இறுதி முடிவு இம்மாத முடிவில் எடுக்கப்படலாம் என்று தெரிகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் நடத்துவதாயின், வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஒரே சமயத்தில், வாக்களிப்பு இடம் பெற வேண்டும் என்றும்—

நாடாளுமன்றத் தேர்தல் என்றால், வடக்கு - கிழக்கை தவிர்த்து ஏனைய பகுதிகளில் தேர்தலை நடத்தி முடிக்க முடியும் என்பதும் தெரிந்ததவையே.

நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றினால் அந்த நாடாளுமன்றத்தினால் நிறைவேற்று ஜனாதிபதிஒருவரைத் தெரிவுசெய்ய வழிவகுக்கும் சட்டத்திருத்தம் ஒன்றைக் கொண்டுவருவதே ஜனாதிபதியின் எண்ணமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சட்டத்திருத்தத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை பெறுவதற்கு எதிரணி எம். பிக்கள் சிலரின் ஆதரவைப்பெற வேண்டியிருக்கும் என்றும் —

நிறைவேற்று ஜனாதிபதிக்குள்ள சில அதிகாரங்களைக் குறைப்பதன் மூலம் எதிரணியினரின் ஆதரவைப் பெறலாம் என்று கருதப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பதாக பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என வாதாடும் ஐ. தே. க. தலைவர்கள் சிலர் இவ்வாதங்களை முன்வைத்துள்ளனராம்.

எனினும் முதலில் பொதுத் தேர்தலை நடத்தும் யோச

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காமினிக்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணை

கொழும்பு, ஜூன் 22

அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் காமினி திஸநாயக்கவுக்கு எதிராக விரைவில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர எதிர்க் கட்சிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

இவ்வாரம் சிங்கள வார இதழான "ஹிரு" குறிப்பிட்டுள்ளது.

மிகவிரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ள இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது ஐ. தே. க. உறுப்பினர் பலரின் ஆதரவு தமக்குக் கிடைக்கும் என்றும்—

அனேகமாக காமினிக்கு ஆதரவாகச் செயற்படும் நந்தா மத்தியூ, அபுசாலி போன்றவர்களைத் தவிர ஏனைய ஐ. தே. க. உறுப்பினர்கள் பலர் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளித்தே வாக்களிப்பர் என எதிர்க் கட்சி எம் பி. ஒருவர் தெரிவித்ததாக 'ஹிரு' குறிப்பிட்டுள்ளது. [ஒ-9]

### சிறீலங்கா கடற்படை தாக்குதலை கண்டித்து

## இலங்கைத் தூதரகம் அருகே தமிழக மீனவர் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜூன் 22

சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரக அலுவலகம் அருகே தமிழக மீனவர் இளைஞர் முன்னணியைச் சேர்ந்த சுமார் 250 மீனவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்

கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களை ஸ்ரீலங்கா கடற்படையினர் தாக்குவதைக் கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பிரதித் தூதுவரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர். ஒ-162)

### அகதிகள் விவகாரம்;

## ஐ.நா. அகதிகள் தூதரக உதவி குறித்து கண்டனம்

லண்டன், ஜூன் 22

ஐரோப்பிய நாடுகளில் இருந்து ஈழத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளுக்கு உதவ அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் முன்வந்திருப்பதை உதவி வழங்கும் தொண்டு நிறுவனங்கள் பலவும் அகதிகள் குழுக்களும் கடுமையாக விமர்சித்திருக்கின்றன.

இந்த விவகாரம் தொடர்பாக தங்களது கருத்துக்களை வலியுறுத்துவதற்காக தொண்டு அமைப்புகளின் பிரதிநிதிகள் இன்று ஜெனிவாவில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகளைச் சந்தித்துப் பேசவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

1990 இற்குப்பின் தமது நாட்டுக்கு வந்த 15 ஆயிரம் ஈழத் தமிழரை சுவிஸும்—

மற்றொரு 15 ஆயிரம் ஈழத் தமிழ் அகதிகளை நெதர்லாந்தும் — திருப்பி அனுப்ப முயற்சித்து வருவதும்—

அந்த நடவடிக்கைகளுக்கு

(4-ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. பிரமுகர் ஆற்றில் குதித்து தற்கொலை!

கொழும்பு, ஜூன் 22

களனி பிரதேச சபையின் ஐ.தே.க உறுப்பினரான எட்வின் டயஸ் விக்ரமசேகர பழைய களனிப் பாலத்தில் இருந்து ஆற்றில் குதித்து தற்கொலை செய்துகொண்டார்.

அவரது பிரேதம் வத்தளைக்கு அருகில் ஹெந்தல எனும் இடத்தில் கரை ஒதுங்கியதாக அறிவிக்கப்படுகிறது.

## அரசியல்வாதிகளிடம் 4 ஆயிரம் துப்பாக்கிகள்

### திரும்பப் பெற 3 மாதம் அவகாசம்

கொழும்பு, ஜூன் 22

தென்பகுதி தீவிரவாத காலத்தின் போது அரசியல்வாதிகளுக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகளையும் "பிஸ்ரல்"களையும் திருப்பி எடுப்பதை துரிதப்படுத்துவதென பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

அரசியல் வாதிகளிடம் சுமார் 4 ஆயிரம் துப்பாக்கிகள் மற்றும் "பிஸ்ரல்"கள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது.

முதல் நடவடிக்கையாக மூன்று மாதகால அவகாசத்தை இந்த அரசியல் வாதிகளுக்கு அரசு வழங்கும். இக்கால எல்லைக்குள் அனுமதி பெறாமல் வைத்துள்ள ஆயுதங்கள் திருப்பி ஒப்படைக்கப்படாவிட்டால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## அனுரா மீண்டும் சு.கவில் சேரலாம்?

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிலிருந்து பிரிந்து, ஐ. தே. கவுடன் இணைந்து தற்போது அமைச்சராகவுள்ள திரு. அனுரா பண்டாரநாயக்க மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் சேர்வதற்கு முயற்சி செய்து வருவதாக சிங்களப் பத்திரிகைகளான யுக்திய, ஹிரு ஆகியன செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்காக அமெரிக்காவிலிருந்து அனுராவின் நெருங்கிய நண்பரான ஷேக் குணவர்த்தன என்பவர் கொழும்புக்கு வந்துள்ளதாகவும் —

அவரே அனுராவை சிங்கப்பூருக்கு கூட்டிச் சென்று அவரது தாயாரைச் சந்திக்க ஏற்பாடு செய்ததாகவும் கூறப்படுகிறது. (ஒ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வளர்க்கோழிக் குஞ்சுகள் இரண்டு — மூன்று மாதங்கள் நிரம்பியவை. உடன் விற்பனைக்குண்டு. ந. கணேஸ்வரன், இல. 24, நாவலடி லேன், பேச்சியம்மன் கோயிலடி, வண்ணார்பண்ணை. [31534]

### இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி (சேவல்) விற்பனை. ஒரு கிலோ 140/-. இல. 53, ஸ்ரேசன் றோட், கொக்குவில் கிழக்கு. (31543)

### வீடு விற்பனைக்கு

இல. 48/1, கோணாவளை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற விலாசத்தில் வீடு ஒன்று விற்பனைக்கு இருக்கிறது. தொடர்பு: ச. இராசலிங்கம். (31530)

### தேவை

5 வருடத்திற்கு குறையாத அனுபவமுள்ள களஞ்சியப் பொறுப்பாளர் உடன்தேவை. உடனடியாக சகல சான்றிதழ்களுடனும் 23-06-94ஆம் திகதி காலை 8-00 மணி முதல் மாலை 3-00 மணி வரையுள்ள நேரத்தில் கீழ் காணும் விலாசத்தில் சமுகம் தரவும். தலைவர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு. கோப்பாய். [கி-8531]

### மணமகள் தேவை

வயது 27, மிருகசீரிடம் 4ஆம் பாதம், 6இல் செவ்வாய், ஜேர்மனியில் நிரந்தர விசாவுடன் தொழில் புரியும் மணமகனுக்கு படித்த நற்குணமுள்ள 23 வயதிற்குட்பட்ட அழகிய மணமகள் தேவை: இங்கு வந்து திருமணம் செய்யவுள்ளார். கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல: 661, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (31528)

### வந்துவிட்டன!

நடைமுறை விடயங்கள் வர்த்தகமும் நிதியும் G.C.E. A/L – 94 மாணவர்களுக்குரியது: ஆசிரியர்கள் திரு. க. தேவராஜா, திரு. இ. இரட்ணம் மிக அண்மைக்கால விடயங்களை உள்ளடக்கியது. (கி-8288)

### கட்டுரை மலர்

காலத்துக்கு ஏற்ற வெளியீடு. சகல புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றது. சச்சி மாஸ்ரரின் மாணவர் கட்டுரை மலர் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கும் 6 ஆம், 7 ஆம், 8ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் உகந்தது. (31545)

### SLEAS

அதிபர், SLEAS பரீட்சைகளுக்குரிய நுண்ணறிவு, பொதுவிவேகப் பயிற்சிகள், ஆய்ந்தறிதல் திறன், கிரகித்தல் ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. கனாநிதி க. குணராசா: சகல பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (31532)

### புலமைப் பரிசில்

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் மாணவருக்கு சிறந்த சச்சி மாஸ்டரின் மாணவர் கட்டுரை மலர் எல்லாப் புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றது. (7465)

### O/L MATHS-94

நிச்சயமாக Credit, Distinction பெறுபேறுடைய 75 இலிருந்து 90 வரை கிடைத்தாள்கள் திருத்திய B. Sc. ஆசிரியரால் ஆண்டு 9, 10 உட்பட கற்பிக்கப்படும். 85, சிவன் கோயிலடி, திருநெல்வேலி. (7467)

### மகாதேவா ஜோதிடம்

குறிப்பு, வீடு, கை பார்த்தல், அதிர்ஷ்ட எண் மாற்றம் ஆகியவற்றிற்கு ஜோதிடரை தினசரி காலை முதல் மாலை வரை 140, செம்மேரி வீதி, நல்லூரில் சந்திக்கலாம். (31517)

### சலவைத்தூள்

மிக்கவைற் சலவைத்தூள் சலவையைத் துரிதமாக்குகிறது. துணியில் அழுக்கைப் போக்கிப் பளிச்சிடும் வெண்மையைத் தருகிறது. சிறுவர்களுக்குச் சிறந்த சலவைச் சாதனம். 50 கிறாம் பக்கற் ரூ. 6/- 450 கிறாம் பெட்டி ரூ. 50/- வெற்றுப் பக்கற்றுகளுக்கு அன்பளிப்புகள் வழங்குகிறோம். "மிக்கவைற்" (கி-8523)

---

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 13 — 01 — 1932

உதிர்வு: 09 — 05 — 1994

### அமரர் சங்கரப்பிள்ளை வீரசிங்கம்

[ஜெயா புரொடக்‌ஷன் உரிமையாளர்]
தொல்புரம் சுழிபுரம்

அன்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய், எல்லோருக்கும் இனியவராய் வாழ்ந்த எம் அன்புத்தெய்வமே! எங்கள் முன்னேற்றத்திற்கும், உயர்விற்கும், வழிகாட்டியாய் இருந்த எங்கள் குல தெய்வமே! எங்கள் அனைவரையும் விட்டுப்பிரிந்தாலும் உங்கள் உருவமும், நினைவும் எங்கள் மனதை விட்டு எப்போதும் நீங்கா எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது தந்தையின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து சகல உதவிகளையும் புரிந்த உற்றார் உறவினர்களுக்கும் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டு மலர் வளையம் செலுத்திய அன்பர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், அஞ்சலித் துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்ட நண்பர்களுக்கும், மற்றும் ஏனையோருக்கும் அன்னாரின் 45ஆம் நாளாகிய இன்று எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, வீட்டுக்கிருத்தியத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்
மருமக்கள் பேரப்பிள்ளைகள்,

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம். (கி-8291)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 21 — 04 — 1937

உதிர்வு: 02 — 07 — 1993

### அமரர் தம்புத்துரை மகேந்திரன்

தொடர்ந்து வந்த துன்பங்களை
துச்சமென மதித்து
தளராது தாங்கி நின்று எங்களை வளர்த்து
பேர் சொல்ல வைத்த பெருமை மிகு அப்பா!
உற்ற நோய் சிகிச்சைக்கென மருத்துவ மனை
சென்றனையே
மீள இங்கு வராது மீளாத் துயில் கொண்டனையே!

அப்பா! உங்கள் சகல சடங்குகளிலும் பங்குபற்றிச் சிறப்பித்த உங்கள் உற்ற நண்பர்களுக்கும், உறவினருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, நின் ஆத்மா சாந்தியடைய நிமலன் அடிகளை எழுமாது அனுதினமும் மனதாரப் போற்றுகின்றோம்.

மனைவி, மகள்,
உறவினர்கள்.

(கி-8290)

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 19 — 09 — 1967

மறைவு: 25 — 06 — 1991

### செல்வி தர்சனா குமாரசாமி (ரதி)

[ஆசிரியை, தர்மக்கேணி அ. த. க. பாடசாலை]

திதி: 22 — 06 — 1994

தரணியை விட்டுச்சென்ற தர்சனா! உன்னை நாங்கள் தரிசனம் செய்திடா காலமோ மூன்றாண்டாச்சு நீந்தியே கவலையாழி கடக்கவும் முடியவில்லை. சாந்தியே உனக்கு வேண்டி வணங்குவோம் இறைவன்தாளை.

அப்பா, அம்மா, சகோதரர்கள்,
அப்பப்பா, அம்மம்மா.

பெரியபளை, ஊனை. (31519)

---

## சுவாமி விவேகானந்தரின் உலகச் சமயப் பெருவிழா

மூன்றாவது தடவையாக யாழ் நாவலர் கலாசார மண்டபத்தில் இன்று (புதன்கிழமை) நடைபெறுகிறது.

காலம்: பிற்பகல் 3மணி

தலைவர்: திருமதி செல்வரூபி ஸ்கந்தராஜா B.Sc.
(அதிபர் வேம்படி மகளிர் கல்லூரி)

சிறப்புச் சொற்பொழிவு:
செல்வி கலாநிதி சண்முகநாதபிள்ளை B. A.

பொருள்:
சுவாமி விவேகானந்தரின் வாழ்வும் வாக்கும்

நூல்கள் அன்பளிப்பு பெறுவோர்:

★ கா. மாணிக்கவாசகர், அரச அதிபர்
(மாவட்ட சுற்றாடல் சூழல் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு வழங்குவதற்கு)

★ வேம்படி மகளிர் கல்லூரி நாடகத்திற்கு கலை நிகழ்ச்சிகள்:
யாழ் கனகரத்தினம் ம. ம. வி. மாணவர்கள்

- சுவாமி சித்ரூபானந்தா

ஸ்ரீராமகிருஷ்ண,
சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை. [கி-8532]

---

## G. A. Q. 1st. in Com. 95

(யாழ் பல்கலைக்கழகம் வெளிவாரி)

பல்கலைக்கழகத்தினால் மேற்கூறப்பட்ட பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விரிவுரைகள்
ஆரம்பமாகிவிட்டன

விபரங்களுக்கு:
எஸ், அருள்நங்கை,

### புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம். [கி-8293]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



செல்வி

### ரூபரஞ்சினிதேவி ஆறுமுகம்

மறைவு: 22 — 06 — 1993

திதி: 11 – 07 – 1994

தாயினும் கருணைச் சகோதரியே! உன் பிரிவு ஆண்டொன்று ஆனாலும் எம் மனதை விட்டு ஆறாது. தன்னலமற்ற பொன்மனச் செல்வியே! உமது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
அக்கா, அத்தான், சின்னம்மாமார்,
(லண்டன்) ஜெகநாதன் குடும்பம்,
சபாநாதன் குடும்பம்,
மற்றும், உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

பிரம்படி லேன்,
கொக்குவில், கிழக்கு. (31524)

---

## நான்காம் வருட நினைவஞ்சலி



மலர்வு: 22 — 05 — 1962

உதிர்வு: 07 — 07 — 1990

### அமரர் இராஜா ஸ்ரீ பிரபாகரன்

காலமெல்லாம் கண்ணீருடன் காத்திருந்தும் காணமுடியாமல் தவிக்கும் நாங்கள் இன்று உமது ஆத்ம சாந்திக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்கின்றோம்.

அன்றும் இன்றும்
உங்கள் அன்பு நினைவோடு வாழும்.

மனைவி, தாய், சகோதரன்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

64/3 பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (31522)

---

யாழ். நீராவியடி
ஜெய வீரகத்தி விநாயகர் ஆலய

## 10ஆம் திருவிழா விஞ்ஞாபனம்

இரவு மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் வீதி உலா வருவார்.

அதனைத் தொடர்ந்து
விசேட நிகழ்ச்சியாக தேவஸ்தான வித்துவான் மற்றும் மகேஸ்வரன் குழுவினரினதும்,
கோவிந்தசாமியின் புதல்வர்களினதும் மேளக் கச்சேரி நடைபெறும்.

### ராஜனின் இன்னிசைக் கானங்கள்

நடைபெறும்

★ ஒலி: அண்ணா சவுண்ட் ★ ஒளி: லோகேஸ்

[கி-8533] - நீராவியடி இளைஞர்கள்.

---

## யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

நடத்தும்

## முழு நிலா நாட் கருத்தரங்கு

காலம்:
22 – 06 1994 பிற்பகல் 3-00 மணி

இடம்:
குமாரசாமி மண்டபம்

கருத்துரை வழங்குபவர்: I
திரு. சி. சிவலிங்கராசா
(தமிழ்த்துறை, சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

கருத்துரை:
19 ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்"

கருத்துரை வழங்குபவர் II
திரு. ஆர். நந்தகுமார்
(சிரேஷ்ட விரிவுரையாளர், பொருளியற்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

கருத்துரை:
"வெளிநாட்டு உதவியும் அரசியல் பொருளாதாரப் பரிமாணமும்"

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்,
யா. இ. க. ப. மா சங்கம்.

விளம்பர அன்பளிப்பு:

### பரணி மருந்தகம்

456, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (கி-8530)

---

## யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

# பதவி வெற்றிடம்

பதவி: **கணக்காளர் 165/88 - 10**

வேதனம்:
1005/- 40X5 — 50X10 — 1705/-
இத்துடன் சமகாலத்தில் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

கல்வித் தகைமை:

(அ) கூ. ச. ஊ 11ஆம் சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் / கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் பற்றிய எழுதுவினைஞர் பதவி ஒன்றில் மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூ. ச. ஊ. 12ஆம் சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் / கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் பற்றிய எழுதுவினைஞர் பதவி ஒன்றில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவன தகுதிச் சான்றிதழ் பரீட்சை அல்லது ஆருசெலவு முகாமைக் கணக்காளர் நிறுவன தேர்ச்சி இறுதி கட்டம் 1 அல்லது இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி கணக்கியல் டிப்புளோமா அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்காளர் / உள்ளகக் கணக்குப் பரிசோதனைப் பதவி ஒன்றில் நாலு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

வயது எல்லை:
வயது 23க்கும் 40க்கும் உட்பட்டதாக இருக்க வேண்டும் (தற்போது கூட்டுறவு ஊழியராக இருப்போருக்கு இந்த நியதி செல்லுபடியாகாது)

வசிப்பிடத் தகைமை:
குறைந்த பட்சம் 2 வருடங்களாவது யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்;

பிணைப் பணம்:
கூ. வே. ஆணைக்குழு சட்டத்திற்கமைவாக சங்கம் தீர்மானிக்கும் தொகையைச் செலுத்தல் வேண்டும்.

உள்ளடக்கப்பட வேண்டியவை:
கல்வி, பிறப்பு, நற்சான்று பத்திரங்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்;

விண்ணப்பப் பத்திரம் ஏற்கப்படும் கடைசித் திகதி:

05 — 07 — 1994

விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபாலில் மேற்சொல்லப்பட்ட விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மூலையில் பதவியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

தலைவர்,

யாழ் மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய். [கி-8528]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## அடாவடித்தனம் நடத்த முடிவா?

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் வாக்குத் தேடும் பொருட்டு அரசாங்கம் தெற்கில் பல சமூக நல, வாழ்க்கைச் செலவுக் குறைப்பு நடவடிக்கைகளை நடைமுறைப் படுத்தி வருகிறது. அந்த வாக்குத்தேடும் கவர்ச்சித் திட்டங்கள் பலவற்றில் பிரதானமான வற்றை வடக்கிலும் அமுல் நடத்துவதற்கு அரசாங்கம் அக்கறை காட்டி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மிகக் குறிப்பாக இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வாக்குக் கவரும் திட்டங்களை வடக்கில் அமுல் செய்வதற்கு அரசு முனைந்துள்ளது. இது விடயத்தில் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் செயலாளரான கலாநிதி விக்கிரம வீரசூரியா மிகுந்த கவனம் செலுத்துகிறார்.

கலாநிதி விக்கிரம வீரசூரியா வெறுமனே அமைச்சுச் செயலாளர் அல்லர். அவர் ஜனாதிபதியின் ஆலோசகர். தேர்தலைக் கருதியே வெளிநாட்டுத் தூதுவர் பதவியில் இருந்து அழைக்கப்பட்டுப் புதிய பொறுப்புகள் அவருக்கு ஒப்படைக்கப்பட்டன.

வெளியிலே பார்ப்பதற்கு அமைச்சுச் செயலாளராகவும், ஆலோசகராகவும் தெரிந்தாலும், ஆளுங்கட்சியின் தேர்தல் உத்திகளை வகுப்பதும், தேர்தல் பிரசாரங்களைத் திட்டமிடுவதுமே அவரின் பிரதான பணிகள். அவற்றுக்கென்றே விஜேதுங்கா அவரைத் தமக்கு நெருக்கமாக்கினார்.

எனவே விக்கிரம வீரசூரியா வாக்குக் கவர்ச்சித் திட்டங்களை வடக்கிலும் அமுல் செய்ய வேண்டும் என்பதில் அக்கறை காட்டுகிறார் என்றால் —

வடக்கிலும் ஜனாதிபதி தேர்தல் நடக்கும், அங்கும் ஆளுங்கட்சிக்கு வாக்குகளைத் திரட்ட வேண்டும் — என்ற உள்ளார்ந்த எண்ணத்துடனேயே அவரும், அரச உயர் பீடத்தினரும் செயற்படுகின்றனர் என்பதே ஆகும்.

வடக்கில் தேர்தலை நடத்துவதற்கான உகந்த சூழ்நிலையை உண்டாக்குவதில் அரசாங்கம் இன்னும் கவனம் செலுத்தவில்லை. யுத்தச் சூழல் இன்னும் நீக்கப்படவில்லை. ஆங்காங்கே உள்ள இராணுவ முகாம்களில் இருந்து கொண்டே அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுகிறார்கள்.

யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவருவது குறித்து அரசு இன்னும் சிரத்தையில் எடுத்ததாக இல்லை. இப்போது நடக்கும் யுத்தத்தை நிறுத்தி, அரசியல் தீர்வு காணப்படும் வரை வடக்கில் தேர்தல் எதனையும் நடத்துவதற்கு அனுமதிக்கப்போவதில்லை என்று விடுதலைப் புலிகள் அறிவித்த பின்னரும், அரசியல் தீர்வுக்கான, பேச்சுவார்த்தைக்கான பாதையில் அரசு இன்னும் ஓர் அங்குலம் தானும் கால் அடி எடுத்து வைக்கவில்லை.

ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் ஆகக் கூடியது நான்கு மாதங்களே உள்ளன. இந்தக் குறுகிய காலத்திற்குள் தேர்தலுக்கு உகந்த சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் எனின் இப்போதே அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாக வேண்டும். யுத்தத்தை நிறுத்திப் படைகளை வாபஸ் பெற வேண்டும்.

ஆனால் அதற்கான அறிகுறி ஒன்றையும் காணோம். அதில் அக்கறை காட்டுவதை விடுத்து வாக்குத் தேடும் கவர்ச்சித் திட்டங்களை அமுலாக்குவதில் ஆர்வம் கொண்டிருப்பது அரசாங்கத்தின் குள்ளத் தனத்தையே காட்டுகிறது.

தேர்தல் நடத்துவதிலும், இறுதி நேரத்தில் ஏதாவது ஒரு வகை அடாவடித் தனத்தில் ஈடுபடுவதற்கு அரசு திட்டமிட்டிருக்க வேண்டும்.

அவ்வாறு அரசு நடக்க முனையும் பட்சத்தில் அரசுக்கு தக்க பதிலடி கொடுக்கவும், அதன் நோக்கத்தை முறியடிக்கவும் தமிழ் மக்கள் தயாராக இருப்பது அவசியம். வெள்ளம் உள்ளே வந்த பின் அதில் அள்ளுண்டு போகாமல், வராமல் தடுக்க அதனை கட்டுவதே சிறந்தது.

# ஈழத்தமிழரின் போராட்டத்துக்கு 100 கனேடிய எம்.பிக்கள் ஆதரவு

ரொறண்டோ ஜூன் 22

இலங்கையில் தமிழர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் —

இனப்பிரச்சினைக்கு முடிவு ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்று கோரியும் — 100 கனேடிய எம். பிக்கள் கனேடிய சட்ட நிபுணரான மார்க்கின் பேர்களுக்கு கடிதம் எழுதியுள்ளனர்:

தமிழ் அகதிகள் நலனில் அக்கறைகாட்டி செயற்பட்டு வரும் மார்கின் பேர்கர், சமாதான முயற்சிகளுக்கான மார்க்கத்தைப் பகிரங்கப் படுத்தும்படி தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு சமீபத்தில் கடிதம் ஒன்றை எழுதியிருந்தது தெரிந்ததே.

கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் செனட்டர்கள் அடங்கிய கமிட்டி ஒன்று இலங்கைத் தமிழர்களை அழைத்து சாட்சியங்களைப் பதிவு செய்து வருகிறது. (இ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 22

வடபிராந்திய யாழ் ஆங்கில மருந்து வணிகர் மன்றத்தினரால் நடத்தப்படும் கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 9மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறும்.

கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் கருத்துரை வழங்குவார்கள். (க)

## புலிகளின் குரல் வானொலியில்

22 - 06 - 1994
புதன் இரவு
★ 8-01 — குயிலோசை வலுவளிக்கும் தானியங்கள் — கிராமிய நிகழ்வு
★ 8-20 — ஏர்முனை "தன்னையே தனக்குதவி" — தனிநடிப்பு
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — நாடகம் 'வெள்ளைப்பிரம்பு'

23-06-1994
வியாழன் காலை
★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — விடுதலை கீதங்கள்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## ஒத்திவைப்பு

அச்செழு சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகத்தால் இன்று புதன்கிழமை 5-பெற இருந்த மாட்டு வண்டிச் சவாரி தவிர்க்க முடியாத காரணமாக ஒத்திவைக்கப் பட்டுள்ளது (க-110)

# மாகாணசபைகளின் அபிலாசைகளுக்கு ஜனாதிபதி மதிப்புக் கொடுக்கவேண்டும்

### பதவி நீக்கம் செய்யப்பட்ட ஆளுநர் சர்வானந்தா பேட்டி

கொழும்பு, ஜூன் 22

மக்களால் தெரிவுசெய்யப் பட்ட மாகாண சபையின் அபிலாஷைகளுக்கும் அபிப்பிராயங்களுக்கும் நிறைவேற்று ஜனாதிபதி மதிப்புக் கொடுக்க வேண்டும்:

பதவிநீக்கம் செய்யப்பட்ட மேல் மாகாண ஆளுநர் எஸ். சர்வானந்தா பத்திரிகைப் பேட்டி ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாகாணசபையை தமது அதிகாரங்களுக்கு சவால் விடும் ஒன்றாக ஜனாதிபதி கருதக்கூடாது. மாகாண சபை மக்களுக்குத்தான் பதில் சொல்ல வேண்டும்.

மாகாண சபைகளுக்கு எதிரான போக்கை மத்திய அரசு கடைப்பிடிக்குமானால் மாகாணசபை முறை செயலற்றுப் போய்விடும்.

ஆளுநரின் கடமை நிறைவேற்று ஜனாதிபதியுடன் சேர்ந்து மாகாணசபையை பலவீனப்படுத்துவது அல்ல, முதலமைச்சருடன் ஒத்துழைத்து மாகாணசபையின் நோக்கங்களை நிறைவேற்ற முயல்வதுதான் முதலமைச்சர் மக்களால் தெரிவு செய்யப் பட்டவர் என்பதை ஆளுநர் தமது மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். முதலமைச்சர் மக்களுக்கே பதில் சொல்ல வேண்டியவர்.

மாகாணசபைச் சட்டத்தின்படி வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள் இச் சபைகளுக்கு வழங்கப்படவில்லை என்று கூறுவதில் அர்த்தம் உண்டு.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக மாகாண சபை இருக்கும் என்று இத்திட்டத்தை தயாரித்தவர்கள் நம்பினர்.

வடக்கு—கிழக்கு மாகாண சபைக்கு நடந்ததை பார்த்த பின்னர் 13ஆவது அரசமைப்புச் சட்டத்தின் வெற்றி குறித்து ஒருவர் நம்பிக்கை வைத்திருக்க முடியாது உள்ளது. இதில் இருந்து படித்த பாடங்களை அடிப்படையாக வைத்தே மாற்றுத் திட்டங்களைக் கொண்டுவர வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (இ-எ)

### விருதுகள் வழங்குவதில் பாரபட்சம்

# வடக்கு - கிழக்கு படையினர் மத்தியில் பெரும் அதிருப்தி

கொழும்பு, ஜூன் 22

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் ஈடுபட்டுள்ள படையினருக்கு விருதுகள், பதக்கங்கள் வழங்குவதில் பாரபட்சமும், புறக்கணிப்பும் இடம் பெற்றிருப்பதாக முறையிடப்பட்டுள்ளது.

பதக்கங்கள் மற்றும் விருதுகளுக்குரிய படையினரைத் தெரிவு செய்யும் முப்படைகளின் தெரிவுக் குழுக்களில் இடம்பெற்றுள்ள அதிகாரிகளுடன் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளவர்களுக்கே இம்முறை பதக்கங்களும், விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இரண்டாம் ஈழ யுத்தம் 1990 இல் ஆரம்பமான போது கிழக்கில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட 20 படை அதிகாரிகளுக்கு விருதுகள் வழங்கப்பட வேண்டும் என்ற சிபார்சுகளை இக் குழுக்கள் நிராகரித்து விட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் முற்றுகைக்குள்ளாகியிருந்த போது யாழ். கோட்டைக்குள் சிக்கியிருந்த படையினரும் இக் கௌரவங்களைப் பெறுவதற்குத் தெரிவு செய்யப்படவில்லை என்று கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளினால் மன்னார் பிராந்தியத்தில் உள்ள படை முகாம்கள் தாக்கப் பட்ட போது ஒரு முகாமில் இருந்து இன்னொரு முகாமுக்கு தகவல் கொடுத்த ஒரு படை அதிகாரிக்கு ரணவிக்ரம விருது வழங்கப்பட்டுள்ளது என்றும் —

இது முட்டாள்தனமான தெரிவு என்றும் "சண்டே ஐலண்ட்" பத்திரிகை தெரிவித்துள்ளது.

போர்த் திட்டங்களை வகுத்தவர்களுக்கு உயர் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன; அத்திட்டங்களை போர் முனைகளில் செயற்படுத்திய அதிகாரிகளுக்கு குறைந்த தர விருதுகளே வழங்கப்பட்டன என்றும் தெரிவிக்கப் படுகிறது. (இ-எ)

# சர்வானந்தாவுடன் சுவாமிநாதன் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 22

மேல்மாகாணத்தின் புதிய ஆளுநர் டி. எம். சுவாமிநாதன் பதவிநீக்கம் செய்யப்பட்ட ஆளுநர் சர்வானந்தாவை அவரது வீடு சென்று சந்தித்தார்.

இருவரும் தற்போதைய நாட்டின் நிலைவரம்பற்றி பேசினார்கள்.

இதேவேளை — பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சர்வானந்தாவுடன் தொலைபேசியில் பேசினார். "என்ன நடந்தது?" என்று பிரதமர் அவரிடம் கேட்டார்.

இதனிடையில் ஆளுநர் என்ற முறையில் சர்வானந்தாவால் பதவிநீக்கம் செய்யப்பட்ட மேல்மாகாண அமைச்சர் பிரேமரத்னா குணசேகராவும் சர்வானந்தாவுடன் தொலைபேசியில் பேசினார்.

"பதிலுக்கு பதில் கிடைத்து விட்டதல்லவா" — என்று சர்வானந்தாவிடம் குணசேகரா கேட்டாராம்.

"என்னை அகற்றிய விதம் தான் எனக்கு பிடிக்கவில்லை" — என்று சர்வானந்தா பதிலளித்தார். "பெரிதாக எடுத்துக் கொள்ளாதீர்கள்" — என்று குணசேகரா ஆறுதல் கூறினாராம்.

சர்வானந்தா பதவி நீக்கம் செய்யப்பட்டது இம்மாதம் 10 ஆம் திகதியாகும்.

அதற்கு முன்பு கடந்த மூன்றாம் திகதி வழமைபோன்று சர்வானந்தா பொலீஸ் மைதானத்திற்கு காலை "நடைபயில" சென்றிருந்தபோது அமைச்சர் காமினி திஸநாயக்காவை சந்தித்தார்.

"பிரேமரத்னா குணசேகராவை பதவி நீக்கஞ் செய்யப் போகின்றீர்களா?" — என்று சர்வானந்தாவிடம் காமினி கேட்டாராம்.

"ஆம். சந்திரிகாவுக்கு அவரை வேண்டாம் என்றால்..." என்றார் சர்வானந்தா.

அப்படியானால் அது குறித்து கட்சி யோசிக்கும் என்று அமைச்சர் காமினி கூறினார் என்று "சண்டே ரைம்ஸ்" தகவல் வெளியிட்டுள்ளது. (இ-எ)

## பாடசாலைகளில்

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் தமிழ்த்தின விழாவும், நிறுவுநர் தினமும் இன்று புதன் கிழமை பி. ப. 1மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

வித்தியாலய சிரேஷ்ட மாணவர் தலைவன் செல்வன் எஸ். இராஜராஜேஸ்வரன் தலைமையில் நடைபெறும் விழாவில் யாழ். உதவிக் கல்விப்பணிப்பாளர் இ. அருளானந்தம் பிரதம விருந்தினராகவும், யாழ். கல்விக்கோட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் வை. செல்வம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள். (க-17)

★ ★ ★

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் முழுநிலா தினவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் திரு க. சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் யாழ். கல்வி வலய பிரதிப் பணிப்பாளர் (சங்கீதம்) இசைமணி கணபதிப் பிள்ளையின் இசைக் கச்சேரி இடம்பெறும். (க-117)

## இன்று

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆண்டு நிறைவுக் கூட்டம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு பேரவை மண்டபத்தில் நடைபெறும். (க)

★ ★ ★

அகில இலங்கைத் தமிழ் மாமன்றம் திருமறைக் கலாமன்றத்தின் உதவியுடன் நாடகப் பயிலரங்கு ஒன்றை நாவற்குழி மகா வித்தியாலயத்தில் இன்று புதன்கிழமை காலை முதல் மாலை வரை நடத்துகிறது. (க)

★ ★ ★

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் அனுசரணையுடன் நடத்தும் புதிய சுற்றை நெறிகளை யாழ். தொழில் நுட்பக்கல்லூரி அதிபர் திரு. கே. ஜெயரட்ணம் இன்று காலை 10 மணிக்கு கிளைத் தலைமையகத்தில் ஆரம்பித்து வைப்பார். (க)

★ ★ ★

கொழும்புத்துறை எழிலூர் சனசமூக நிலையத்தின் முழுநிலாக் கருத்தரங்கு 4 ஆவது தொடர் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு நிலைய மண்டபத்தில் திரு. வி. டெனடிக்ற் தலைமையில் நடைபெறும். (ஜ-30)

# பாஸ்கரலிங்கத்தை திருப்பி அழைக்கும் பின்னணி என்ன?

### விஜேதாஸா - வீரசூரியா முறுகல் நிலை காரணமாம்

கொழும்பு, ஜூன் 22

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் விஜேதாஸாவுக்கும் ஜனாதிபதியின் ஆலோசகர் டாக்டர் விக்கிரம வீரசூரியாவுக்கும் இடையே தீவிரமடைந்து வரும் முறுகல் நிலையை தணிக்கவே வைத்திய விடுமுறையில் சென்றுள்ள திரு: ஆர்: பாஸ்கரலிங்கம் திருப்பி அழைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் அவரது செயலகத்தில் உள்ள உயர் அதிகாரிகளில் ஒருவர் வெளிநாட்டில் தங்கியுள்ள திரு. பாஸ்கரலிங்கத்துடன் தொடர்பு கொண்டு அவரது உடல்நிலை பற்றி விசாரித்தார்.

இன்னும் இரண்டு வாரங்களில் தமது உடல் நிலை தேறிவிடும் என்று திரு. பாஸ்கரலிங்கம் தெரிவித்ததை அடுத்து, அவரது வருகையை ஜனாதிபதி எதிர்பார்த்திருப்பதாக, ஜனாதிபதி செயலக அதிகாரி தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்தே பாஸ்கரலிங்கம் எதிர்வரும் முதலாம் திகதி கொழும்பு திரும்புகின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரவை மாற்றத்தைத் தொடர்ந்து தமது அமைச்சுச் செயலாளர் பதவி பறிபோகலாம் என்ற எதிர்பார்ப்பில், அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுவதற்கு பாஸ்கரலிங்கம் முன்னர் முடிவு செய்திருந்தார். அத்துடன் தமது உத்தியோக வாசஸ்தலத்தை இன்னொரு திறைசேரி அதிகாரியிடம் அவர் ஒப்படைத்தார். தமது சாரதியையும் மத்திய வங்கிக்கு இடமாற்றம் செய்திருந்தார். (இ-எ)

## ஜனாதிபதி ஆலோசகர் பதவியே வீரசூரியாவுக்கு

திரு பாஸ்கரலிங்கம் நாடு திரும்பிக் கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் அமைச்சர் காமினி திஸநாயக்காவின் மைத்துனரான டாக்டர் விக்கிரம வீரசூரியா என்ன பதவியை வகிப்பார் என்ற கேள்வி ஜனாதிபதி செயலக வட்டாரங்களில் எழுந்துள்ளது.

பாஸ்கரலிங்கம் நாடு திரும்பும் வரையே டாக்டர் வீரசூரியா கொள்கை திட்டமிடல் அமைச்சின் பதில் செயலாளராகக் கடமையாற்றுவார் என்று அண்மையில் நாடாளுமன்றத்தில் அரசின் சார்பில் அமைச்சர் விமல்விக்கிரமசிங்கா தெரிவித்திருந்தார்;

டாக்டர் வீரசூரியா அவுஸ்திரேலியாவில் இருந்து நாடு திரும்பியதும் அவரே கொள்கை திட்டமிடல் அமைச்சின் செயலாளராக தொடர்ந்து பணி புரிவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எப்படியாயினும் டாக்டர் வீரசூரியா தொடர்ந்து ஜனாதிபதியின் ஆலோசகராக இருப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

டாக்டர் வீரசூரியாவிற்கு எதிராக ஜனாதிபதி செயலகத்தில் காட்டப்பட்டு வரும் எதிர்ப்பு ஆளும் கட்சியில் இடம்பெற்று வரும் அதிகாரப் போட்டியின் பிரதிபலிப்பே என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

### அமைச்சர் ஒருவரை பதவி நீக்க முன்

# சர்வானந்தா ஜனாதிபதியுடன் ஆலோசனை நடத்தியிருக்க வேண்டும்

### ஆளுநர் சுவாமிநாதன் கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 22

மேல்மாகாண அமைச்சர் ஒருவரை பதவி நீக்கம் செய்வதற்கு முன்னதாக திரு சர்வானந்தா ஜனாதிபதியுடன் ஆலோசனை நடத்தியிருக்க வேண்டும்.

மேல்மாகாண ஆளுநர் டி. எம். சுவாமிநாதன் முன்கண்டவாறு தெரிவித்தார்.

"நாட்டின் வரலாற்றில் நெருக்கடியான நிலையில் ஆளுநர் பதவியை ஏற்றுள்ளேன் தமிழர் எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளை தீர்க்க அரசு முயற்சிக்கிறது நானும் இதற்கு உதவுவேன்.

"ஜனாதிபதியின் விருப்புக்கிணங்கவே ஆளுநர் பதவி வகிக்கின்றார்.

முன்னாள் ஆளுநர் சர்வானந்தாவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையே ஏதோ ஒரு தொடர்பு இடைவெளி இருந்தது குறித்து நான் வருந்துகிறேன்" —

என்று அவர் கூறினார். (இ-எ)

## நாடகத்தில் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ். மாவட்ட ரீதியில் நடைபெற்ற தமிழ் மொழித் கலைத்திறன் போட்டிகளில், பிரிவு மூன்று — வரலாற்று நாடகப் போட்டியில், காரைநகர் கலாநிதி. ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

ஆண்டு 11 மாணவர்களால் நடிக்கப் பெற்ற "தென்னவன் பிரம்மராயன்" என்னும் நாடகமே மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. குழு இரண்டு திருக்குறள் அறிவுப் போட்டியிலும் இப்பாடசாலையே மாவட்ட ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. [ஓ]

## ஜனதாதள் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜோர்ஜ் பெர்னாண்டஸ், முன்னாள் சபாநாயகர் ரபிராய், ஹரிகிஷன்சிங் ஆகியோர் முக்கியமானவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

எக்கட்டத்திலும் 14 எம். பிக்களும் இந்திரா காங்கிரஸில் சேரமாட்டார்கள் என்று திரு. ரபிராய் தெரிவித்தார்.

ஏற்கனவே முன்னாள் அமைச்சர் அஜித்சிங் தலைமையில் 19 எம். பிக்கள் விலகி தனிக் குழுவாக இயங்கியதும் பின்னர் இந்திரா காங்கிரஸில் சேர்ந்து கொண்டதும் தெரிந்ததே. (ஓ-எ)

# மனித உயிர்களைப் பலி எடுக்கும் குண்டுவீச்சை நிறுத்த வேண்டும்

### ஜனாதிபதிக்கு கூட்டுறவுச்சபை மகஜர்

பெறுமதிமிக்க மனித உயிர்களுக்கு மதிப்பளித்து குடியிருப்புகளை நோக்கி நடத்தப்படும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களையும் ஷெல் வீச்சுக்களையும் பீரங்கித் தாக்குதல்களையும் உடனடியாக நிறுத்த வேண்டும்.

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபை, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக சிறீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கு நேற்று அனுப்பிய மகஜர் ஒன்றில் இவ்வாறு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

நீர்வேலி ப. நோ. கூ. ச. தலைவர் வே. சின்னத்தம்பி கடந்த மாதம் 22ஆம் திகதி காலையில் நடைபெற்ற விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலினால் கொல்லப்பட்டார். இது போன்ற அனர்த்தங்கள் மீண்டும் ஏற்படாமல் தடுக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கூட்டுறவுச் சங்கத் தலைவர் வே. சின்னத்தம்பியுடன் அவருடைய மகள் சிவதர்சினியும் மருமகள் புஷ்பராணியும் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் கொல்லப்பட்டதை ஒட்டி விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நல்லெண்ண சமிக்ஞைகளைப் புரிந்து கொண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஏற்ப பொருளாதாரத் தடையை நீக்கி, சுமுகமான நிலையை உருவாக்கி, அர்த்தமற்ற போரை உடனடியாக நிறுத்த வேண்டும்.

இப்படி மகஜரில் கோரப்பட்டுள்ளது. (க-17-162)

## வீரவணக்க கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

வலிகாமம் கோட்டத்தைச் சேர்ந்த — 6 ஆம் மாதத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் வீரவணக்கக் கூட்டம் இன்று புதன் இரவு 8 மணிக்கு மானிப்பாய் வாரகி அம்மன் கோயில் முன்றிலில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் அதில் உரையாற்றவுள்ளனர். கலை நிகழ்ச்சி இடம்பெறும். (ஓ-5)

**விழித்தெழுவோம் பெண்ணினமே;**
**அழித்தொழிப்போம் சீதனத்தை!**

**மரத்தினை நாட்டிடுவோம்**
**மழையினை பெற்றிடுவோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DIPLOMA IN NURSING

தாதிப் பயிற்சி நெறியில் டிப்ளோமா

புதிய பிரிவுக்கான

- Pharmacy
- Physiology
- Annatomy வகுப்புகள்

ஆரம்பமாகின்றன.

விபரங்கட்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**

14 St Peter,s Lane,
Jaffna. [சி/8536]


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சாமிநாதர் றோசம்மா

கரவெட்டியைச் சேர்ந்த சாமிநாதர் றோசம்மா காலமானார்.

இவர் காலஞ்சென்ற சாமிநாதரின் அன்பு மனைவியும், திருமதி வி. சந்திரின், காலஞ்சென்ற யேசுதாசன், திருமதி யூ. மேரி திரேசா, திருமதி இ. மேரி மாகிரேட், பேனாட் மரியதாஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பிலிப் வின்சன், திருமதி யே. அரசி, யூஜின் யோகராஜா (ஓமான்), இராமச்சந்திரன், திருமதி ம. ராஜி ஆகியோரின் அன்பு மாமியும், ஜெசி (கனடா), எட்வின் ஜோசப், சாள்ஸ் (யாழ். பல்கலைக்கழகம் - முதலாம் ஆண்டு விஞ்ஞான பீடம்), பற்றிக், மனோராஜ், விமல்ராஜ், ராஜ்குமார், நிசாந்தி, நிஷோ, ருக்ஷி, ரெனோ, றோய் ஆகியோரின் அன்புப்பேத்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று புதன்கிழமை மாலை 4 00 மணிக்கு கரவெட்டி சேமக்காலையில் நடைபெறும்.

தகவல்:
இ. வை. சாள்ஸ்
(பேரன்)
(யாழ். பல்கலைக்கழகம்)

''நாதன் பங்களா''
சரஸ்வதி வித்தியாலய வீதி,
கரவெட்டி. (சி / 8538)

## DR. இராமநாதர் அம்பலவாணர்

காரைநகர் களபூமி, பொன்னாவலையைச் சேர்ந்த DR. இராமநாதர் அம்பலவாணர் காரைநகரில் காலமானார்.

இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் தவநாயகி [அதிபர், காரைநிதி ஆ. தியாகராசா ம. ம. வித். காரைநகர்], தவபாலன் [கணக்காளர்], சாந்தகுமாரி [சட்டத்தரணி] ஆகியோரின் அருமைத் தந்தையும், பாலசிங்கம் [மக்கள் வங்கி, வர்த்தகத்துறை], சிவபாதம் [இலங்கை வங்கி மாவட்டக் காரியாலயம், யாழ்ப்பாணம்], தேவகி [கொழும்பு] ஆகியோரின் அருமை மாமனாரும், ஜனன், ரூபன், தர்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 19 - 06 - 1994 ஞாயிற்றுக் கிழமை காரைநகரில் நடைபெற்றன.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
பிள்ளைகள், மருமக்கள்

620 A, ஓட்டுமடம்,
மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். [31553]

## திருமதி ஞானம்மா பேதுறுப்பிள்ளை

நவாலி தெற்கைச் சேர்ந்த திருமதி ஞானம்மா பேதுறுப்பிள்ளை [ஓய்வு பெற்ற அதிபர், மானிப்பாய் சென்ற் ஆன்ஸ்] காலமானார்.

இவர் காலஞ்சென்ற சிறைச்சாலை அதிகாரி பேதுறுப்பிள்ளையின் [சக்கிறிஸ்ரன்] அன்பு மனைவியும், திருமதிகள் லூட்ஸ் மேரி, எலிசபேத் அம்மா, மேரி திரேசா [மானி. மகளிர் கல்லூரி ஆசிரியை], திரு யேசுதாசன் பேதுறுப்பிள்ளை [மக்கள் வங்கி, கண்ணாதிட்டி] ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. ய. மரியாம்பிள்ளை [ஓய்வு பெற்ற சிறைச்சாலை அதிகாரி], திரு. ப. சுவாம்பிள்ளை (ஓய்வு பெற்ற அதிபர்), திரு. டா. ஞானப்பிரகாசம் [தொழில் நுட்பவியலாளர்], திருமதி நவமலர் அவர்களின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [22-06-94] நவாலி புனித பேதுறுபாவிலு ஆலயத்தில் பி. ப. 3. 30 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:-
திரு. யே. பேதுறுப்பிள்ளை
[மகன்]

நவாலி தெற்கு,
மானிப்பாய், [31554]

## திருமதி சுந்தரம்பிள்ளை கற்பகம்

அனலைதீவு - நயினாதீவு

அனலைதீவைச் சேர்ந்த சுந்தரம்பிள்ளை கற்பகம் 16 - 06 - 94 அன்று ஜேர்மனியில் காலமானார்.

இவர் நயினாதீவைச் சேர்ந்த தம்பிமுத்து சுந்தரம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், அனலைதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவநாதர் (முன்னைநாள் விவாக, இறப்பு, பிறப்புப் பதிவாளர்), தங்கமுத்து தம்பதிகளின் மகளும், நயினாதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பிமுத்து — பாறுவதிப்பிள்ளை, சிதேவிப்பிள்ளை அவர்களின் மருமகளும், சத்தியமூர்த்தி (ஜேர்மனி), ஸ்ரீகல்யாணி (கனடா), ஸ்ரீரதி (ஜேர்மனி), புண்ணியமூர்த்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மனோரஞ்சிதம் (கிளி) (கனடா), சுந்தரலிங்கம் (கனடா), நவரெத்தினம் (ஜேர்மனி), வளர்மதி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கந்தையா (முன்னைநாள் விவாக, இறப்பு, பிறப்புப் பதிவாளர்), காமாட்சிப்பிள்ளை (கனடா), கமலாம்பிகை (கொழும்பு), சின்னம்மா (நீர்வேலி), காலஞ்சென்ற இராசலெட்சுமி, காலஞ்சென்ற நவரெத்தினம், தவமணி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலசிங்கம், கனகலிங்கம், சதாசிவம், காலஞ்சென்ற இரகுப்பிள்ளை, மனோன்மணி, காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற கந்தையா, காலஞ்சென்ற சண்முகம், சின்னம்மா, தம்பிராசா ஆகியோரின் மைத்துனியும், மனோன்மணி, பரமேஸ்வரி, திலகவதி, லீலாவதி, இராசநாயகம் ஆகியோரின் சகலியும், சிந்துஜா, சியானுஜா, பிரசன்னா, பிரவீணன், காயத்திரி, சர்மிளா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறேன்.

தகவல்:
வ. த பாலசிங்கம்
(மைத்துனர்)

30 / 10 அத்தியடி குறுக்கு வீதி,
(பிள்ளையார் வீதி)
யா / அத்தியடி. (31551)

# தொண்டா - அஷ்ரப் யோசனை

# குறித்து சபையில் வாக்குவாதம்

கொழும்பு, ஜூன் 22

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கென்று அமைச்சர் தொண்டமானும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பும் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள யோசனை குறித்து நாடாளுமன்றத்தில் நேற்று காரசாரமான வாக்குவாதங்கள் இடம்பெற்றன.

முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதி ஜனாப் ஹிஸ்புல்லா நாடாளுமன்றத்தில் பேசும் போது —

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அமைச்சர் தொண்டமானும், அஷ்ரப்பும் சமர்ப்பித்துள்ள யோசனை குறித்து ஜனாதிபதி இன்னும் பதில் கூறவில்லை?

இந்த யோசனை குறித்து விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேசுவதற்காக அமைச்சர் தொண்டமான் யாழ்ப்பாணம் செல்வதற்கு ஜனாதிபதி ஏன் அனுமதி வழங்கவில்லை?

— என்று கேட்டார்.

''எமது தலைவர் அஷ்ரப் விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனுக்கு கடிதம் எழுதியுள்ளார்'' என்று ஒரு கூட்டத்தில் கூறியதும் —

அமைச்சர் றொனி டி மெல் ''பிரபாகரன் பதில் அனுப்பினாரா?'' என்று கேட்டார்.

ஹிஸ்புல்லா பேசும்போது றொனி டி மெல், காமினி திஸநாயக்கா ஆகிய இருவரும் அவரிடம் கேள்விக்கணைகளைத்தொடுத்தனர். (அ-3)

## வைப்புப் பணம் மீளளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 22

ஷப்றா யுனிக்கோ நிதி நிறுவனத்தின் யாழ். பணிமனையில் நிதி வைப்புச் செய்தோருக்கான முதலாம் கட்ட மீளளிப்பு இப்போது தொடர்ந்து வழங்கப்படுகிறது.

மீளளிப்பைப் பெறுவதற்கான தமது விண்ணப்பங்களை இதுவரை சமர்ப்பிக்காத வைப்பாளர்கள் இம்மாதம் முப்பதாம் திகதிக்கு முன்னர் யாழ். பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (த)

### கூட்டுறவாளர்...

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

பேரணி கோயில் வீதியில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகத்தை அடைந்தது அங்கு சங்கத்தின் யாழ் வதிவிடப் பிரதிநிதியிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

தொடர்ந்து பேரணி கோயில் வீதி, ஆஸ்பத்திரி வீதி, கண்டி வீதி வழியாக யாழ். செயலகத்தை அடைந்தது.

குடாநாட்டு மக்கள் மீது அரச படையினர் நடத்தும் கண்மூடித்தனமான தாக்குதல்களைக் கண்டித்து — ஜனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட — மகஜர் அங்கு வைத்து யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

நண்பகல் 12 மணிக்கு பேரணி முடிவுற்றது.

இப் பேரணி காரணமாக யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கக் கிளைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. (உ-15-17-163)

### ஐ. நா....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தூதரகம் முன்வந்திருப்பதும் தெரிந்ததே.

இந்த விடயமே பல பொது அமைப்புகளை அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்தின் மீது சீற்றம் கொள்ளவைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது (உ-3)

### புலிகளுடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சபைத் தேர்தலில் தமது கட்சிக்கு ஏற்பட்ட தோல்வியை அடுத்து தமது பழைய ''பல்லவியை'' வலியுறுத்துவதை நிறுத்திவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் நெருங்கும் வேளையில் அரசியல் தீர்வு குறித்து அவர் பிரஸ்தாபிக்கத் தொடங்கியிருப்பதாக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

''வட பகுதியில் தேர்தல் நடத்த முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா'' — என்று ''த சண்டே லீடர்'' செய்தியாளர் கேட்டதற்கு —

ஜனாதிபதி விஜேதுங்க ஒரு வார்த்தையில் ''ஆம்'' என்று மட்டும் பதிலளித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-எ)

### நாடாளுமன்ற...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னைக்கு முன்கணி அமைச்சர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் என்றும் —

முதலில் நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுவது அரசியல் ரீதியில் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பேரழிவை ஏற்படுத்தும் என்று இவர்கள் கருதுகின்றனர் என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

எப்படியாயினும் — இது விஷயம் குறித்து அரசுத் தலைமைப்பீடம் எவ்வித முடிவும் எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இறுதி முடிவு இம்மாத முடிவினுள் எடுக்கப்படலாம் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

### நகரில் ஒலித்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ ஆகாயத்தில் இருந்து எம் தாயகத்தின் மீது குண்டு வீசுவதை நிறுத்து!

★ புத்த தர்மத்தில் புக்காராவும் ஒன்றா?

★ நேரில் நின்று போரிட முடியாத — நீ! வானில் நின்று குண்டு வீசாதே!!

★ சிங்கள அரசே உனக்கு சிதைக்கக் கிடைத்தது தமிழனின் சிரசா?

★ சிங்களத் தடைகளை வெல்வோம்; சுதந்திர தமிழீழத்தை அமைப்போம்.

(ஒ-162-15-17)

## ஆலயங்களில்

வழக்கம்பரை அம்மன்கோவில் தேர்த்திருவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். சுவாமி தேரில் பவனி வந்து பக்தர்களுக்குக் காட்சி கொடுத்த பின்னர் அம்பாள் பச்சை சாத்திதேரில் இருந்து இறங்கும் வைபவம் மாலை 5 மணிக்கு இடம் பெறும். (ஒ-28)

★ ★ ★

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று காலை 7 மணிக்கும் தீர்த்தத் திருவிழா நாளை காலை 10 மணிக்கும் நடைபெறும் (க)

★ ★ ★

சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா இன்று புதன் கிழமையும் தீர்த்தத் திருவிழா நாளை வியாழக்கிழமையும் நடைபெறும்.

தேர்த்திருவிழாவின் போது கல்வளையந்தாதிப் போட்டி இடம் பெறும், (க-90)

★ ★ ★

கொக்குவில் — நந்தாவில் சற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று புதன்காலையிலும் தீர்த்தத் திருவிழா நாளை வியாழன் காலையிலும் நடைபெறும். 25 ஆம் திகதி சனிக்கிழமை பூங்காவனத் திருவிழாவின் போது விசேஷ சங்காபிஷேகம் (1008) இடம்பெறும். [ச]

★ ★ ★

சாவகச்சேரி மண்டுவில் கண்ணகை அம்மன் (சோலை அம்மன்) ஆலய தேர்உற்சவம் இன்று புதன்காலை 8 மணிக்கு நடைபெறும் தீர்த்தோற்சவம் நாளை வியாழன்காலை 10 மணிக்கு இடம்பெறும். (ஒ-117)

## பிரபா ஓர் 'இராணுவ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பு விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே.

இது தான் திரு பிரபாகரனின் உளப்பாங்கு இதற்கு விலை அதிகம் கொடுக்கவேண்டியிருக்கலாம்! ஆனால் அவர் இறுதி வரை போராடுவார்.

அசாதாரண திறமை

தமது இராணுவ, அரசியல் கட்டமைப்புகளை ஒன்றாகச் செயற்படுத்தும் உயர்ந்தபட்ச அர்ப்பணிப்பும் அசாதாரண திறமையும் பிரபாகரனிடம் உள்ளன. இந்த நுட்பத்தினால் தான் அவர் எதிராளிகளைத் தாக்குகின்றார் இவை தான் அவரை ஒரு வீரனாக்கியுள்ளன

அவர் தமது புதுமையான போர் உபாயங்களில் இறுதியாக தற்கொலைப் படையை பயன்படுத்தி வருகின்றார். 1987 இல் நெல்லியடி இராணுவ முகாம் மீது முதலாவது கரும்புலியான கப்டன் மில்லர் நடத்திய தற்கொலை தாக்குதலுடன் இது ஆரம்பமானது.

பிரபாகரன் நிறைய வாசிப்பவர். இத்தற்கொலைப் படைத் தாக்குதலை அவர் பெய்ரூட் அனுபவத்தில் இருந்து பெற்றுள்ளார் என்று நம்பப்படுகிறது.

இப்புதுமைத் தற்கொலைத் தாக்குதலை தவிப்பட்டவர்களையும் நிறுவனங்களையும் தாக்குவதற்கு அதிகபட்சமாக பிரபாகரன் பயன்படுத்தி வருகிறார்.

20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 21 ஆம் நூற்றாண்டிலும் உலக தீவிரவாதத்துக்கு விடுதலைப் புலிகள் நமது மீது அச்சமூட்டும் பங்களிப்பாக தற்கொலைத் தாக்குதல் கலையைத்தான் தந்துள்ளனர்.

இதன் அடிப்படை என்னவென்றால், ஒருவன் தான் சாக வேண்டும் என்று தீர்மானித்து விட்டால், இன்னொருவன் வாழ்வதைத் தடுப்பதும் பெரும்பாலும் சாத்தியமானதாகிவிடும்.

போராளி இயக்கங்கள் — குறிப்பாக வட ஆபிரிக்கா, அரேபியா மற்றும் வளைகுடா பகுதிகளில் உள்ள போராளி அமைப்புகள் — லட்சக்கணக்கான ரூபா பணத்துக்கு அல்லது நவீன ஆயுதங்களுக்காக ஒரு தற்கொலைப் போராளியை பண்டமாற்றுச் செய்து கொள்ளும் வாய்ப்புக்காகக் காத்திருக்கும்.

இது சாத்தியப்படாவிட்டால் தன்னைக் கொல்வதன் மூலம் இன்னொருவரை கொலை செய்யும் பாணியை யாவது அவர்கள் பின்பற்றுவர்.

சந்தேகமின்றி இப்படியான நிலை தோன்றுமிடத்து கல்விமான்களும் போர் உத்தி நிபுணர்களும் விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றி நுணுக்கமான ஆய்வு ஒன்றை நடத்துவர்.

இதேபோன்று சர்வதேச ரீதியில் சர்வதேச பாதுகாப்பு மற்றும் புலனாய்வு ஏஜென்சிகளின் கண்காணிப்பு குவிந்தலைப் புலிகள் இயக்கம் உட்படுத்தப்படும்.

தற்கொலைப் போராளியுடன் எவரும் சண்டையிட்டு வெற்றி காண முடியாது. இதனைத் தடுத்து நிறுத்த தற்பாதுகாப்பு நடவடிக்கைகளே தேவை.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு போராளி அமைப்பாக — பின்னுக்குத் திரும்பிப் பார்க்க முடியாத அளவுக்கு — முன்னேறியுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவ வெற்றி காணப்பட வேண்டும் என்ற இராணுவ ஜெனரல்கள் மற்றும் அரசியல் வாதிகளின் எண்ணம் சாத்தியப்படாது. அது பகற்கனவாகவே அமையும் ஆகவே இலங்கை பாதுகாப்புப் படையினரின் எதிர்கால பங்கு மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும். அரசும் மக்களும் வேறு செயல்படுத்தக் கூடிய வாய்ப்புகள் குறித்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

— இவ்வாறு அந்தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)


# எடிசன் அக்கடமி

**O/L DAY CLASSES**

| (யாழ். இந்து அருகில்) 41/1/1, K.K.S வீதி, யாழ்ப்பாணம். | (கொக்குவில் இந்து அருகில்) 27, K.K.S வீதி, கொக்குவில். |
|---|---|
| பிரிவு - 2 | பிரிவு - 3 |

எமது வழமையான ஆசிரியர் குழுவால்

**ஆரம்பம்: 23-06-1994**

வியாழன் 8மணி

★ 06-06-94 அன்று ஆரம்பிக்க இருந்த மேற்படி பிரிவுகள் தவிர்க்க முடியாத காரணத்தால் 23-06-94 வியாழன் ஆரம்பமாகின்றது.

[சி-8525]


இப்பத்திரிகை ... கிரிட்டெட்டினால் ... 22-06-1994 இல் ... செய்யப்பட்டது.


சரவணை — பள்ளம்புலம்

## அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோயில்

மஹோற்சவ

## தீர்த்த உற்சவத் திருநாள்

மேற்படி ஆலயத்தின் 1994 ஆம் ஆண்டிற்கான மஹோற்சவத்தை முன்னிட்டு தீர்த்த உற்சவத் திருநாளாகிய பவ வருடம் ஆனி மாதம் 9 ஆம் நாள் (23 - 06 - 94) வியாழக்கிழமை (நாளை) முற்பகல் 10 30 மணிக்கு நல்லைக் கந்தன் ஆலயத்தில் முருகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேகமும் வழிபாடும் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

அத்தருணம் அடியார்கள் யாவரும் வருகைதந்து முருகப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மேற்படி ஆலய
அறங்காவற் சபையினரும்
உபயகாரர்களும்
(31552) [சரவணை]



## முக்கிய அறிவித்தல்

### தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்-

யாழ் மாவட்டம்

### விஷேட பொதுச்சபைக் கூட்டம்

இடம்: புதிய விஞ்ஞான கல்விக் கழகம் (எழிலகம் முன்பாக)

காலம்: 24 – 06 – 1994 (வெள்ளி) பி. ப. 3. 30 மணி

★ மாற்றியமைக்கப்பட்ட புதிய ஒழுங்கு விதிகள் அறிவிக்கப்படவுள்ளன.

★ அனைவரது வரவும் மிக முக்கியமானதாகும்.

பொதுச் செயலாளர்,
யாழ். மாவட்டம்.
(சி-8534)



## நீங்கள் கொழும்பு செல்கிறீர்களா?

அங்கு வசதியுடன் தங்க

## பம்பலப்பிட்டியில் காசில் லொட்ஜ்

நல்ல சூழலில் சுகாதார வசதிகளுடன் குறைந்த செலவில் தங்கலாம். உள்ளநாட்டு, வெளிநாட்டு தொலைபேசித் தொடர்புகள், விமான நிலையம், புகையிரத நிலையம், திருத்தலங்கள் செல்வதற்கு போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

இன்றே நாடுங்கள்:

**CASTLE INN (LODGE)**

37, 39 CASTLE LANE,
BAMBALAPITIYA,
COLOMBO - 4,
Telephone; 583176

[31548]


## கண்ணீர் அஞ்சலி

இளைப்பாறிய மின் அத்தியட்சகர்

### அமரர் இ. பாலசுப்பிரமணியம்

(கட்டுடை — மானிப்பாய்)

அவர்களுக்கு

எமது இதய பூர்வமான
கண்ணீர் அஞ்சலிகள்

அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு, எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்;

இலங்கை மின்சாரசபை
நலன் புரிச்சங்க ஊழியர்கள்.

மத்திய மின் நிலையம்,
சுன்னாகம். (7241)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில்: | | விண்ணில்: |
|---|---|---|
| 06 — 10 — 1921 |  | 07 — 07 — 1990 |

அமரர்

### பிரம்மஸ்ரீ பொ. கனகசபாபதி ஐயர்

(தும்பளை, பருத்தித்துறை)

திதி: **22 - 06 - 1994**

அந்தணர் தமக்கு அகல் விளக்காகவே
எந்நாளும் திகழ்ந்து எழிலுற்றிருந்தீர்
முந்தை வினையை முடித்திட்ட காலனை
நிந்தனை செய்தென் நீர்துயர் தீருமோ?

எமது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

28, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம். (31550)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org